# வள்ளலார் நிறுவிய நிறுவனங்களும்சமூக சீர்திருத்தங்களும்

# Companies Established by Vallalar and Social Reforms

***முனைவர் ஜோ. சம்பத்குமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

**Dr. J. Sampath Kumar**
*Assistant Professor, Department of Tamil*
*Tiruthangal Nadar College, Chennai*

**ஆய்வுச் சுருக்கம்**

*அருட்பிரகாச வள்ளலார் என்று போற்றப்படும் வடலூர் இராமலிங்க அடிகள் சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் 1823 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் குழந்தையாக இருக்கும்போதே தந்தை இறந்தார், இதனால், சென்னையில் குடியேறுவதற்கான நிலை ஏற்பட்டது. அப்பொழுது தான் கல்வி கற்கத் தொடங்கினார். ஆனால் கல்வியில் நாட்டமில்லை. முருகக்கடவுளை வணங்குவதிலேயே காலத்தைக் கழித்தார். சிறு வயதிலிருந்தே ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு பல பாடல்களைப் பாடிய தொகுப்பு தான் திருவருட்பா என்று போற்றப் படுகின்றன. இவரோ இல்லற வாழ்க்கையில் ஈடுபட மறுத்து துறவு வாழ்க்கையை மேற் கொண்டார். அப்பொழுது பல்வேறு நிறுவனங்களை நிறுவி சமூக சீர்திருத்தங்களை மேற்கண்ட நிலைகளைப்பற்றி இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளன.*

***முக்கியச் சொற்கள்:***

*அருட்பிரகாச வள்ளலார், வடலூர் இராமலிங்க அடிகள், திருவருட்பா, சன்மார்க்கசங்கம், சத்தியதருமசாலை, சத்தியஞானசபை, சித்திவளாக*

**Abstract**

*Vadalur Ramalinga Adigal, popularly known as Arutprakasa Vallalar, was born in 1823 in Marudur, next to Chidambaram. His father died when he was a child and he had to migrate to Chennai. Then he started studying. But he had no interest in education. He spent his time worshiping Lord Murugan.*

*Thiruvarutha is a collection of songs sung by many who have been involved in spirituality since childhood. This person refused to engage in domestic life and practiced monastic life. This article explores the above stages of social reform by setting up various organizations then.*

***Keywords:***

*Vadalur Ramalinga Adigal, Arutprakasa Vallalar, Thiruvarutpa, Sanmarga Sangam, Sathya Tharumasalai, Sathiya Ganasabai, Sithivazhagam.*

**Citation**

Sampath Kumar, J. "Companies Established by Vallalar and Social Reforms." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 15–19.

*நிறுவனங்கள் வள்ளலார் வடலூரில் நிறுவி நான்கு நிறுவனங்கள் இன்றும் செயல்பட்டு வருகின்றன. மேலும் பத்து நிறுவனங்களை நிறுவத்திட்டமிட்டு ஏற்பாடும் செய்தார்; ஆனால் அவை நிறுவப்பெறாமலே நின்று போயின.*

*நிறுவியநிறுவனங்கள் 4*

1. *சன்மார்க்கசங்கம் (1865)*
2. *சத்தியதருமசாலை (1867)*
3. *சத்தியஞானசபை (1872)*
4. *சித்திவளாகம் (1870)*

*முதல் மூன்றும் வடலூரில் ஒரே இடத்தில் உள்ளன. நான்காவது, வடலூர்க்குத் தெற்கே மூன்று மைலில் மேட்டுக்குப்பம் என்னும் ஊரில் அமைந்துள்ளது.*

*சென்னையிலும் வடலூரிலும் இவருடைய வாழ்க்கை நிலைகள் எவ்வாறாக இருந்தது என்பதை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து காணலாம். சென்னை வாழ்க்கை தல வழிபாட்டிலும் பாமாலைகளைப் பாடுவதிலும், தம்மை அடுத்தவர்களுக்குப் பாடஞ் சொல்வதிலும் சில நூல்களைப் பதிப்பிப்பதிலும் கழிந்தது.*

*வடலூர் வாழ்க்கையோ, வழிபாடு, பாடல்செய்தல், இவற்றோடு நிறுவனங்களை நிறுவு தலையும் பெற்றது.*

*வள்ளலாரின் உள்ளத்தில் இளமை காலத்தில் எழுந்த எண்ணங்களும் கொள்கைகளும் வடலூர் வாழ்வை மேற்கொண்ட புதிய உத்தியாக உருப்பெற்ற சமரச சுத்தசன் மார்க்கம் எனப் பெயரிடப்பெற்றது. மேலும் மார்க்கத்தைப் பரப்புவதற்குச் சில நிறுவனங்கள் வேண்டும் என வள்ளலார் எண்ணினார். பின்னர் ஒவ்வொன்றாகச் சிலவற்றை நிறுவவும் தொடங்கினார். இதனைப் பற்றி கீழ்வருமாறு காண்போம்.*

**சன்மார்க்கசங்கம்**

*1858-ல் சென்னை வாழ்க்கையைத் தொடர்ந்து வடலூரை அடுத்த கருங்குழி, வள்ளலாரின் உறை விடமாயிற்று. அடிக்கடி சிதம்பரம் சென்று வழிபடுவதையும், பாமாலைகள் பாடிப் பரவுவதையுமே அடிகள் பெரும் பணியாகக் கொண்டிருந்தார். இந்நிலையில் தமது மார்க்கத்திற்கு ஒரு சங்கம் தொடங்க விரும்பினார்.*

***தங்கமே அனையார் கூடியஞான***
***சமரச சுத்தசன் மார்க்கச்***
***சங்கமே கண்டுகளிக்கவும் சங்கம்***
***சார்திருக்கோயில் கண்டிடவும்***
***துங்கமே பெருஞ்சற்சங்கம் நீடூழி***
***துலங்கவும் சங்கத்தில் அடியேன்***
***அங்கமே குளிர நின்றனைப்பாடி***
***ஆடவும் இச்சைகாண் எந்தாய். (3406)***

*என்று தன் விருப்பத்தை இறைவனிடம் விண்ணப்பித்தார். தம்மை அடுத்துச் சூழ்ந்திருந்த அன்பர் சிலரைக்காட்டிச்சன் மார்க்க சங்கத்தை 1865-ல் கருங்குழியில் நிறுவினார்.*

*2000 ஆண்டுகளுக்கு முன் பேசங்கம் வைத்துமொழி வளர்த்தநாடு, தம்நாடு, மொழிச் சங்கம் நமக்குப் பழமையானது. ஆன்மீக சங்கமோ நமக்குப் புதுமையானது, தமிழகத்தில் ஆன்மீகத்திற்கென்றே முதன் முதலில் சங்கம் நிறுவியவர் வள்ளலாரே, வள்ளலாருக்கு முன் பிருந்த ஞானிகள் மடங்களை நிறுவித்தொண்டு செய்தனர். வள்ளலாரோ மடம் நிறுவாது சங்கம் நிறுவினார். மடத்திற்கும் சங்கத்திற்கும் வேறுபாடு என்ன? மடம் துறவறத்தார்க்கு மட்டுமே உரியது. சங்கம் இல்லறத்தார்க்கும் உரியது. மடம் ஆடவர்க்கு மட்டுமே உரியது. சங்கம் பெண்டிர்க்கும் உரியது. சங்கமாக நிறுவியதால் தான் இன்று ஊரெங்கும் நாடெங்கும் சன் மார்க்க சங்கங்களைக் காண்கிறோம். உலக மக்கள் அனைவரையும் சன் மார்க்க சங்கத்தில் சேர்ப்பதற்கென்றே இறைவன் தன்னைப் படைத்தான் என்று வள்ளலார் கூறுவார். மக்கட் சமுதாயத்திற்கு மட்டுமேயன்றி அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் வள்ளலார் கொள்கையாகக் கொண்ட சமூக சிந்தனையாளர் ஆவார். இதை ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை என்றும் இவ்வுரிமையைப் பரப்பவும் சன் மார்க்க சங்கத்தை நிறுவினார்.*

**சத்திய தருமசாலை**

*வள்ளலாரின் கொள்கைகளில் தலையானது சீவகாருணியம். இதனை அற்றார் அழிபசி தீர்த்தல், புலால் மறுத்தல் என இருவகையால் வற்புறுத்திக்கூறுவார். சீவகாருணிய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது வள்ளலார் வாய்மொழி, வாய்மொழி மட்டுமல்ல, கையெழுத்தும் அஃதே. ''சீவகாருணிய ஒழுக்கம்'' என்றே ஒரு நூலை எழுதினார். எழுதியதைச் செயலில் செய்து காட்டுவதற்காகச் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.*

*புலால் உண்பவரைப் புறவினத்தார் என்றும் புலால் மறுத்தவரை அக வினத்தார் என்றும் மக்களை இரண்டு வகையாக வள்ளலார் பிரித்துச் சுட்டினார். புலால் உண்ணும் புறவினத்தார் சன்மார்க்க சங்கத்தில் சேர்வதற்கு உரிய வராவார் ஆனால் பசி என்று தரும சாலைக்கு அவர்கள் வந்து விட்டால் உணவு இல்லை என்பதில்லை. புறவினத்தார் பசியும் போக்கப் பெற்றது. இது வள்ளற் பெருமானே செய்த ஏற்பாடு. பசியின் கொடுமையைப் பற்றி முன்பு இருந்த ஔவையார், திருவள்ளுவர் முதலியோர் நிறையப் பாடியிருக்கிறார்கள். ஆனால் வள்ளலாரைப் போல் செய்தார் யார்? என்று வண்ணச் சாபம் தண்டபாணி சுவாமிகள் ஒரு பாடலில் கேட்பது உண்மை என்று ஊரன் அடிகள் எழுதிய நூலின் வழி விளங்கிக் கொள்ளலாம்.*

**சத்தியஞானசபை**

*கடவுள் ஒருவரே என்பதும் அவரை, ஜோதி-ஒளி-வழிபட வேண்டும் என்பதும் வள்ளலார் கொள்கை. இறைவன் ஜோதி வடிவில் வழிபடுவதற்கென்றே வடலூரில் வள்ளலாரால் சத்திய ஞான சபை நிறுவப்பெற்றது. சபை எண் கோண வடிவில் செப்புக்கூரை (கோபுரம்)யுடன் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. சபை நடுவே இறைவன் அருட்பெருஞ் ஜோதியாய் எழுந்தருளியுள்ளான். ஜோதியின் முன்னர் கண்ணாடி ஒன்றுள்ளது. கண்ணாடியை அடுத்து ஏழு வெவ்வேறு நிறத்திரைகள் உள்ளன. திரைகள் அகன்றால் கண்ணாடியில் ஜோதியை தரிசிக்கலாம்.*

**சித்திவளாகம்**

*1867-ல் தருமச் சாலையை நிறுவியது. முதல் சாலையே உறை விடமாயிற்று, வரவரக் கூட்டம் பெருகவேஅமைதியை நாடி அடிகள் 1870-ல் அடிகளின் மேட்டுக்குப்பம் சென்றார். அங்கு அடிகள் தனித்துறைந்த இடமே சித்தி வளாகத் திருமாளிகை, சித்தி வளாகம் என்பது அடிகளே இட்ட பெயர். 30-1-1874ல் சித்தி பெற்றது இங்கேயே, இவற்றின் ஆட்சி சங்கம், சாலை, சபை, சித்தி வளாகம் ஆகிய இந்நான்கும் ஒரு தொகுதியாகத் திருவருட் பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள் என்ற பேரால் இப்போது வழங்குகின்றன. தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ். அறங்காவலர் ஐவராலும் நிர்வாக அதிகாரி ஒருவராலும் இவை நிர்வகிக்கப் பெறுகின்றன. (ஊரன் அடிகள் அறங்காவல் ஐவருள் ஒருவர் என்பது தெரிந்திருக்கலாம்)*

*நிறுவிய தருமசாலையை தவிர*

1. *வைத்தியசாலை*
2. *சாஸ்திரசாலை*
3. *உபகாரசாலை*
4. *விருத்திசாலை*
5. *உபாசனாசாலை*
6. *யோகசாலை*
7. *விவகாரசாலை*

*என ஏழு சாலைகளை நிறுவத்திட்ட மிட்டிருந்தார்.*

**சன்மார்க்க போதினி (1867)**

*இதுமும் மொழிப்பாடசாலை; தமிழ், ஆரியம், ஆங்கிலம் மூன்றையும் கற்பிப்பது. சிறுவர்க்கு மட்டுமின்றி முதியோர்க்கும் கற்பிப்பது. தமிழ்நாட்டில் முதியோர் கல்வியை முதன் முதலில் ஏற்படுத்தியவர். வள்ளலாரேயாவர். இப்பாட சாலையைப் பற்றிய குறிப்பில் ''தமிழ், ஆரியம், இங்கிலீஷ்'' என்றும் முறை வைப்பு அருமையானது. நாட்டுமொழியும், தாய்மொழியும் ஆகிய தமிழ் முதலில் வைக்கப்பட்டது. ஆட்சி மொழியாகிய ஆங்கிலம் மூன்றாவதாக வைக்கப்பட்டது. மும்மொழிப்பாட சாலையையும், முதியோர் பாடசாலையையும், வள்ளலார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கினார் எனில் அவரது தீர்க்க தரிசனத்தை அளவிடுதல் யாங்ஙனம். வருங்காலத்தில் பன்மொழியறிவும் பயிற்சியும் இன்றியமையாததென அன்றே வள்ளலார் கருதினார் என ஊகிக்கலாம்.*

**சமரசவேத பாடசாலை (11-1-1872)**

*நல்லறிவு, கடவுள்பக்தி, உயிர்இரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குணங்களையும் உண்மை உரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்கு உபகரித்தல் முதலிய நற்செய்கைகளையும் உடையவர்களாயிருக்க வேண்டும், சில காலம் இதிற்பயின்று ஓரளவு பயிற்சி பெற்ற பின் அவரவர்கள் பயிற்சிக்கும், குடும்பத்துக்கும் தக்கவாறு மாதந்தோறும் பொருளுதவி செய்யப்பெறும், பயிற்சிக்குத்தக்கவாறு பொருளுதவி அளிப்பது பொதுவாக எங்கும் உள்ளது. குடும்பத்திற்குத்தக்கவாறு பொருளுதவி என்பது வள்ளலாருக்கே உரிய தனிப்பெருங் கருணைத்திருவுள்ளம். இப்பாட சாலை காலையும் மாலையும் இரண்டு இரண்டு மணி நேரம் நடைபெறும். இதில் 15 வயதிற்கு மேற்பட்டவர்களே சேர்த்துக் கொள்ளப் பெறுவார்கள். இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி சமூக விழிப்புணர்வை ஊட்டினார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.*

**சன்மார்க்கவிவேகவிருத்தி (1868)**

*இவ்வளவு நிறுவனங்களுக்கும், திட்டங்களுக்கும் ஒரு பத்திரிகை பலம் வேண்டாமா? தமது மார்க்கத்தைப் பரப்புவதற்கு ஒரு பத்திரிகை இன்றியமையாததென்று 1867ல் வள்ளலார் சன் மார்க்க விவேக விருத்தி என்று ஒரு திங்களி தழைத் தொடங்கினார் என்றும் பின்னர், 1967 முதல் ஊரன் அடிகள் நடத்தி வந்ததாகவும் தெரிகிறது.*

**முடிவுரை**

*வள்ளலார் காலத்தும் அதற்கு முன்பும் ஐரோப்பியர் மருத்துவத்தாலும் கல்வியாலும் தன் சமயத்தைத் தமிழகத்தில் பரப்பினர். பண்டைக்காலத்தில் சமண சமயம் தமிழ்நாட்டில் பரவிச் செல்வாக்குப் பெற்றதற்குரிய பல காரணங்களும் சமணரது இலக்கியப்பணி, மருத்துவதானம் முதலியவும் காரணமன்றோ. வள்ளலாரும் தமது மார்க்கத்தை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பல சாதனங்களைக் கையாண்டார். பல நிறுவனங்களை நிறுவினார். கல்விச்சாலை நிறுவினார். பல மொழி பயிலும் வாய்ப்புகளை ஏற்படுத்தினார். முதியோர்க்கும் கல்வி பயில வசதி செய்தார். மருத்துவசாலை, உபகாரசாலை, விருத்திசாலை, விவகாரசாலை, யோக சாலை, சாஸ்திர (புத்தக) சாலை முதலிய பல சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்தார். சமயப் பணியோடு, சமுதாயப்பணி; ஆன்மீகப் பணியோடு அறிவியற்பணி, அருளியற் பணியோடு உலகியற் பணி என்று இன்று நாம் பேசுகிறோம். இவையெல்லாம் அன்று நூறு ஆண்டுகளுக்கு முன் வள்ளலார் கொண்டிருந்த திருவுள்ளக்கிடையே; தீட்டிய திட்டங்களே. வள்ளலார் நிறுவி, இன்றுள்ள நிறுவனங்களோடு, நிறுவத் திட்டமிட்டும் ஏற்பாடு செய்தும் நின்று போன நிறுவனங்களும் இன்றிருந்தால் வடலூர் நிலைபாடுகள் முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருக்கும். இந்நிறுவனத்தினூடாக, நிகழ்ந்த சமுகசீர்திருத்தங்களை இக்கட்டுரையின் ஊடாக உணரலாம்.*

**துணை நின்றவை**

1. *ஊரன் அடிகள் - இராமலிங்க அடிகள் வரலாறு*
2. *திரு. வி. சுலியாணசுந்தரனார் - இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்*
3. *சாமி. சிதம்பரனார் - வடலூரார் வாய்மொழி*
4. *கே. சீனிவாசன் - சுத்தசன் மார்க்க விளக்கம்*
5. *மீ. பொ.சிவஞானம் - வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு*
6. Shanmugam, M. Saiva Siddhanta and the Social Philosophy of St. Ramalingam (unpublished Ph.D, thesis of the University of Madras), 1978.

## References

1. *Uraan Adigal, Ramalinga Adigalar Varalaru.*
2. *Thiru.Ve.Kalyanasundaranar, Ramalingaswamigal Thiruvullam.*
3. *Sami Chithambaranar, Vadaloorar Vaivazhi.*
4. *K.Seenivasan, Sutha Sanmarga Vizhagam.*
5. *Me.Po.Sivaganam, Vallalar Kanda Orumaipaddu.*
6. *Shanmugam, M. Saiva Siddhanta and the Social Philosophy of St. Ramalingam (unpublished Ph.D, thesis of the Lniversity of Madras), 1978.*